## கிருஷ்ணகிரி மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளையின் 2022-23 நிதியாண்டிற்கான ஆண்டறிக்கை (**Annual Plan**)

தமிழ்நாடு மாவட்ட கனிம கட்டமைப்பு விதிகள் 2017-ன்படி கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியரின் செயல்முறை ஆணை எண் ந.க.414/கனிமம்/2017, நாள்:14.09.2017-ன்படி கிருஷ்ணகிரி மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை பத்திரமானது 26.09.2017 அன்று தயார் செய்யப்பட்டு, ஆவண எண்.22/2017/BK4, நாள்:26.9.2017-ன்படி கிருஷ்ணகிரி இணை சார் பதிவாளர்-II அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது.

இந்நேர்வில் அரசாணை எண்.35 தொழில் (எம்எம்டி.1) துறை நாள்: 11.03.2022-ன்படி கிருஷ்ணகிரி மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை கீழ்க்குறிப்பிட்டுள்ள அலுவலர்களை அங்கத்தினர்களாகக் கொண்டு அமைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி கிருஷ்ணகிரி மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளையில் உள்ள அலுவலர்களை அரசாணையில் தெரிவித்துள்ளபடி 09.09.2022 நாளிட்ட மாவட்ட ஆட்சியரின் செயல்முறை ஆணையின்படி திருத்தி அமைக்கப்பட்டு பத்திரமானது 15.09.2022 அன்று தயார் செய்யப்பட்டு, ஆவண எண்.25/2022/B.IV, நாள்: 21.09.2022-ன்படி கிருஷ்ணகிரி இணை சார் பதிவாளர்-II அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது.

| வ. எண் | நிர்வாக குழு அமைப்பு | வ. எண் | மேலாண்மைக் குழு அமைப்பு |
|---|---|---|---|
| 1 | மாவட்ட ஆட்சியர், கிருஷ்ணகிரி | 1 | மாவட்ட ஆட்சியர், கிருஷ்ணகிரி |
| 2 | மாவட்ட வருவாய் அலுவலர், கிருஷ்ணகிரி | 2 | மாவட்ட வருவாய் அலுவலர், கிருஷ்ணகிரி |
| 3 | துணை / உதவி இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, கிருஷ்ணகிரி | 3 | துணை / உதவி இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, கிருஷ்ணகிரி |
| 4 | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கிருஷ்ணகிரி | 4 | கிருஷ்ணகிரி தொகுதி மக்களவை உறுப்பினர் (Lok Sabha) |
| 5 | துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள், கிருஷ்ணகிரி | 5 | கிருஷ்ணகிரி மாவட்ட மாநிலங்களவை உறுப்பினர் (Rajaya Sabha) |
| 6 | முதன்மைக் கல்வி அலுவலர், கிருஷ்ணகிரி | 6 | சட்டமன்ற உறுப்பினர்கள்<br>1. ஊத்தங்கரை (51) |
| 7 | மாவட்ட கருவூல அலுவலர், கிருஷ்ணகிரி | | 2. பர்கூர் (52)<br>3. கிருஷ்ணகிரி (53) |
| 8 | மாவட்ட சமூக நல அலுவலர், கிருஷ்ணகிரி | | 4. வேப்பனப்பள்ளி (54)<br>5. ஒசூர் (55) |
| 9 | உதவி இயக்குநர் (ஊராட்சி) கிருஷ்ணகிரி | | 6. தளி (56) |
| 10 | தி/ள்.ஆராதனா பொது சேவை மற்றும் திறன் மேம்பாட்டு அறக்கட்டளை, எண்.13/9, ஒசூர் | 7. | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கிருஷ்ணகிரி |
| 11 | திரு. R.சந்திரசேகரன்,<br>பொது மேலாளர்,<br>தி/ள். பண்ணாரி அம்மன் சுகர்ஸ், எண்.22, ராயப்பா தெரு, கிருஷ்ணகிரி. | 8. | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர், ஊராட்சிகள் வளர்ச்சி, (PAPD) கிருஷ்ணகிரி |
| | | 9. | உதவி இயக்குநர், ஊரக வளர்ச்சித் துறை, கிருஷ்ணகிரி |
| | | 10. | மாவட்ட ஆதி திராவிடா மற்றும் பழங்குடியினர் நல அலுவலர், கிருஷ்ணகிரி |

| | | | |
|---|---|---|---|
| | | 11. | மாவட்ட சுற்று சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், கிருஷ்ணகிரி |
| | | 12. | மாவட்ட வன அலுவலர், கிருஷ்ணகிரி |
| | | 13. | முதன்மைப் பொறியாளர், பொதுப்பணித்துறை, கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, கிருஷ்ணகிரி மண்டலம். |
| | | 14. | உதவி இயக்குநர், நில அளவைப் பதிவேடுகள் துறை, கிருஷ்ணகிரி |
| | | 15. | மாவட்ட கருவூல அலுவலர், கிருஷ்ணகிரி |
| | | 16. | மாவட்ட சமூக நல அலுவலர், கிருஷ்ணகிரி |
| | | 17. | துணை இயக்குநர், (பொது சுகாதார மையப் பொறுப்பாளர்) சுகாதாரப் பணிகள், கிருஷ்ணகிரி |
| | | 18. | இணை இயக்குநர், வேளாண் துறை, கிருஷ்ணகிரி |
| | | 19. | கோட்ட பொறியாளர், தேசிய நெடுஞ்சாலை, கிருஷ்ணகிரி |

2) கிருஷ்ணகிரி மாவட்ட கனிம அறக்கட்டளைக்காக, கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக பாரத ஸ்டேட் வங்கிக் கிளையில் ஒரு வங்கிக் கணக்கு (கணக்கு எண்.37243080996) துவக்கப்பட்டு சிறு மற்றும் பெருங்கனிமங்களுக்கான உரிமக் கட்டணத்தின் அடிப்படையில் உரிய விதிகளின்படி மாவட்ட கனிம கட்டமைப்பிற்கான நிதி வசூலிக்கப்பட்டு கொண்டு வருகிறது. மேலும், வங்கி கணக்கு எண்.37243080996-ல் இருந்து நிருவாக செலவினங்களுக்காக அரசாணை எண்.112 தொழில் (எம்.எம்.டி.1) துறை நாள்: 30.05.2019 மற்றும் இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத் துறை, சென்னை அவர்களின் அறிவுரையின்படியும் 6% தொகையை புதியதாக துவங்கப்பட்ட வங்கி கணக்கு எண். 39489050626-ல் செலுத்தப்பட்டும் நிருவாக செலவினங்களும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

3)கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 2 பெருங்கனிம சுரங்கக் குத்தகை உரிமங்களும் 339 சிறுகனிம குவாரி குத்தகை உரிமங்களும் உள்ளன. சிறுகனிம குத்தகையில் 216 கிரானைட் குவாரிகளும் மற்றும் 120 சாதாரண கல் குவாரிகளும் உள்ளன. நடப்பிலுள்ள பெரு/சிறு கனிம உரிமங்களில் 12.01.2015-க்கு முன்னர் வழங்கப்பட்டதில் உரிமக் கட்டணத்தில் 30% தொகையாகவும், 12.1.2015-க்கு பின்னர் வழங்கப்பட்ட இனங்களில் உரிமக் கட்டணத்தில் 10% கனிம அறக்கட்டளை நிதியாக வசூல் செய்யப்பட்டு வருகிறது.

4) கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சுரங்கப் பணிகளால் நேரடியாக 127 கிராமங்களும், மறைமுகமாக 211 கிராமங்களும் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளாக கண்டறியப்பட்டுள்ளன.

5) கிருஷ்ணகிரி மாவட்ட கனிம அறக்கட்டளை நிதியாக 31.03.2023-வரை ரூ.30,45,78,847/-(ரூபாய் முப்பத்து கோடியே நாற்பத்து ஐந்து இலட்சத்து எழுபத்தி எட்டாயிரத்து எண்ணூற்று நாற்பத்து ஏழு மட்டும்) வசூலிக்கப்பட்டு அறக்கட்டளை வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

6) மேலும், 2022-23ஆம் நிதியாண்டில் கிருஷ்ணகிரி மாவட்ட கனிம அறக்கட்டளை மூலமாக வசூலிக்கப்பட்ட நிதியிலிருந்து ஏற்கனவே ரூ.17,98,82,898/-ம் தொகை 52 திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. தற்போது 31.03.2023 முடிய ரூ.13,82,25,660/- வங்கி நடப்பு கணக்கில் இருப்பாக உள்ளது. மேற்கண்ட இருப்புத் தொகையிலிருந்து மாவட்டத்தில் சுரங்கப் பணிகளால் பாதிக்கப்பட்ட பகுதி / கிராமங்களுக்கு தேவையான திட்டங்களை நிறைவேற்றி தரக்கோரி பின்வரும் விவரப்படியான மதிப்பீடுகள் பெறப்பட்டுள்ளன.

| வ. எண் | திட்டப்பணிக்கு பரிந்துரைக்கப்பட்ட அலுவலர்கள் விவரம் | பணிகள் விவரம் | மதிப்பீட்டு தொகை ரூபாய் கோடியில் |
|---|---|---|---|
| 1 | செயற்பொறியாளர் (பொ.ப நீர்வள அமைப்பு) | கொண்டப்பநாயனப்பள்ளி கிராமம் - மார்க்கண்டேயேன் நதி குறுக்கே தடுப்பணை கட்டுதல் | 4.56 கோடி |
| 2 | செயற்பொறியாளர் (பொ.ப நீர்வள அமைப்பு) | பெரியமுத்தூர் கிராமம் - கே.ஆர்.பி. அணையில் பூங்கா மற்றும் திட்ட இல்லம் ஆகியவற்றிக்கு சாலை வசதி செய்தல் | 1.00 கோடி |
| 3 | உதவி இயக்குநர் (ஊராட்சி) | நேரலகிரி கிராமத்தில் சாலை வசதி செய்தல் (11 திட்டங்கள்) | 0.46 கோடி |
| 4 | வன உயிரின காப்பாளர், ஓசூர் | 10 கிலோ மீட்டருக்கு இரும்பு கம்பி வேலி அமைத்தல் | 5.60 கோடி |
| | | | 11.62 கோடி |

எனவே, 2022-23-க்கான ஆண்டுக்கு கிருஷ்ணகிரி மாவட்ட கனிம அறக்கட்டளையின் கீழ் மேற்கண்ட திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்குமாறு சம்மந்தப்பட்ட அலுவலர்களிடமிருந்து முன்மொழிவுகள் வரப்பெற்றுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சியர் / தலைவர்
கிருஷ்ணகிரி மாவட்ட கனிம
அறக்கட்டளை, கிருஷ்ணகிரி.

06/8/24

6/8/24

6/8/24

6.8.24